## 39. திருக்கொடுமளூர்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*பண் - சாதாரி.*

**சி**ந்துசுல விந்தநிலை தன்னிலும தன்புடையர்
சேவடி புகழ்ந்துதொழவோ
நுந்திரு விரும்புபரி பக்குவர்கண் மும்மலமு
நூறியருள் செய்யவெனவோ

---

*9.* ***இந்த்ரன்*** = *வடநூன்முடிபு.*

அந்தமடி யற்றபர மங்கள வகண்டசிவ
மாகவுள நீர்கழனிசூழ்
சுந்தர மலிந்துயர் திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 1

**ச**த்திய மதர்ப்பதர் நடத்துகிரி யைக்குரிய
சத்தியென நூல்கணுவலும்
புத்தமுத வாய்மையுடை வள்ளிதொழி லெண்ணிநினை
புந்தியர்க ளுக்கருளநீர்
இத்தரைய ரென்கொழுந ரென்றறிய நின்றிடு
மெனச்சொலுரை கொண்டபடியோ
சுத்தமுறு பத்தருய் திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 2

**வா**னவரு நாடரிய ஞானமய மானபெரு
வானென விருக்குமொருநீர்
ஏனலி லிருந்தமட மானினி நலங்கருதி
யேசறு புளிந்தவடிவம்
ஆனவ னறும்புரிவி னானினைவர் நோய்களை
யறுப்பவ னிமாசலசுதை
சூனுவென வோதவொ திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 3

**பூ**ர்த்திபுக லுங்கருணை யங்கட லெனத்தவர்
புகன்றிட விருக்குமொருநீர்
பார்த்திப னருந்தவ நிரம்பிட வுரப்புடைய
பன்றிதொடர் வுற்றபெரிய
மூர்த்திமக னாமிவர் நினைப்பவர்கள் வாழ்வரென
மூவுலகு நன்கறியவோ
தூர்த்தர்க ளிலாவொரு திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 4

**வா**னிலவு பானுவென வேயுயிர்க ளுள்ளிட
மதிக்குமுத லாகுமுணர்வா
யேநிலவு கின்றவொரு நீர்தமிய னுக்குநிக
ரேழைகள் புரக்கவெனவோ

மீனிலவு கண்ணிமலை மாமக டனக்கினிய
மெய்க்குழவி யாகிவிளைவுச்
சூனிய மிலாதுயர் திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 5

**இ**ப்புடவி யிப்பிறவி வேண்டுகில மென்றுமுள
வீசவுனை யேயடைகுவோம்
எப்படியு மென்றுபணி யுத்தம ரகத்திடை
யெழுந்துலக கானமுலவும்
ஒப்பறு மகந்தைமுத லாமறவர் வெல்லவென
வோதனிமை வாளுழவர்போல்
துப்புடைய கார்மலி திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 6

**மா**லயனும் வந்தனைசெ யற்புத விலாசபர
மாகவொளிர் கின்றவொருநீர்
மூலமல வாவிகளி னீலமல வாதனை
முருக்கிநினை வுந்திருடுமோர்
சாலமுல கோரவென வோநிமல மானசிவ
சண்முக மறைத்துநெடிய
தூலவுடை நீழலொர் திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே. 7

**வி**ற்றிற மியங்கிரவி யுஞ்சசியு மங்கியும்
விளக்குமறி வித்திடவொணா
முற்றறி வெனாமறை முழக்கவுள நீருயிர்கண்
மொய்வினை முருக்கியருள்வான்
உற்றவுரு வம்பல வுளும்மிதுவு மொன்றென
வுணர்த்தவென வோநிலவளந்
துற்றுமெழின் மிக்குறு திருக்கொடும ளூர்நனி
துலுங்குகிறி ரெம்மிறைவரே. 8

**ஓ**ருருவு மீருருவு மூவுருவும் வேறுருவு
மோய்வில்பல தேவருருவும்
பாருருவு நீருருவு மாரல்வளி வானுமறை
பன்னிட விருக்குமெவையும்

பேருருவில் வைத்துளவொர் நீருல குயிர்த்திரள்
        பிடிக்கவென வோவுடைமரத்
தூரடியி லேருயர் திருக்கொடும ளூர்நனி
        துலங்குகிறி ரெம்மிறைவரே. 9

**சொ**ன்னய மிகுந்தகலை வேண்டுகில மேகலைகொள்
        சுந்தரிக ளாசையுலகம்
பொன்னழி புலைப்புணர்வு வேண்டுகில மெய்யடி
        பொருந்தவரு ளென்பவர்களின்
நன்னினை வறிந்தருள வோபுனித சோணகிரி
        நாதர்குரு வாயவொருநீர்
தொன்னில வளங்கிளர் திருக்கொடும ளூர்நனி
        துலங்குகிறி ரெம்மிறைவரே. 10

மன்மத வருடம் புரட்டாதி மாதம் 16ஆம் தேதி மங்கள வாரம்.